# பொதுக்காலத்தின் இருபத்திரண்டாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-09-01

(*இன்றைய வாசகங்கள்:*

*இணைச்சட்ட நூலிலிருந்து வாசகம்.* 4:1-2,6-8,

*பதிலுரைப்பாடல்: திபா.* 15:2-5,

*திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்.* 1:17-18,21-22,27,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 7: 1-8,14-15,21-23)

***திருப்பலி முன்னுரை***

*தூய்மைக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்திரண்டாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு தேவையற்ற மனித மரபுகளில் இருந்து விலகி கடவுளின் கட்டளைகளைக் கடைபிடித்து தூயவர்களாய் வாழ நமக்கு அழைப்பு விடுக்கிறது. மனித உள்ளத்தின் விளைவுகளாகிய கொலை, விபசாரம், களவு, பேராசை, வஞ்சகம், செருக்கு, காமவெறி போன்ற தீச்செயல்களில் இருந்து விலகி வாழ நாம் அழைக்கப்படுகிறோம். கடவுள் நமக்கு தந்த இறையன்பு மற்றும் பிறரன்பு கட்டளைகளைப் பின்பற்றி வாழுமாறு ஆண்டவர் நம்மைத் தூண்டுகிறார். உடலின் தூய்மையை விட உள்ளத்தின் தூய்மையையே கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கிறார் என் பதை இயேசு நமக்கு எடுத்துரைக்கிறார். நம் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றும் தூய எண்ணம் கொண்டவர்களாய் வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*வாழ்வும் வழியுமான இறைவா!*

*உம் வார்த்தையை வாழ்வாக்கிய உம் திருஅவையின் ஊழியர்களுக்கு, இறைமக்களை நேரிய பாதையில் வழிநடத்திச் செல்ல தேவையான இறையருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மனித நேயத்துடன் வாழ பணித்தவரான இறைவா!*

*மனித உள்ளங்களில் இருக்கும் தீய எண்ணங்கள் மாறி இறைவார்த்தையால் இதயங்களைப் பக்குவப்படுத்தி கடவுளுக்கு நெருக்கமான மக்களாக வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பே உருவான இறைவா!*

*சட்டங்கள் இருக்கிறது என்று கண்மூடித்தனமாக வாழ்வதைத் தவிர்த்து. சட்டத்தின் உட்பொருளை உணர்ந்து அதன்படி வாழ்வதே உயர்ந்தது என்ற சிந்தனையோடு வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழப் பணித்தவரான இறைவா!*

*நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்று அடுத்தவரைப் பற்றிய நல்ல செயல்கள் நல்ல குணங்களை நினைத்து அவர்களின் நலனில் அக்கரை கொண்டு வாழ நல்ல மனதைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*கருணைக் கடலே இறைவா!*

*மனித உள்ளங்களில் ஏற்படும் பொறாமை, போட்டி, தீய எண்ணங்கள், பிறரைக் கெடுத்து மகிழ வேண்டும் என்ற கொடூர நினைவுகள் இவற்றிலிருந்து விடுபட்டு வாழ நல்ல மனதைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*விடுதலை தருபவராம் இறைவா,*

*தீராத நோய்கள், கடன் தொல்லைகள், மன வேதனைகள், பிரச்சனைகள் போன்றவற் றில் சிக்கித் தவிப்போர் அனைவரும், நம்பிக்கையோடு உமது உதவியை நாடவும், உம் இரக்கத்தால் அவற்றில் இருந்து விடுதலை பெற்று, வாழ்கின்ற உண்மை கடவுள் நீரே என்பதை அறிக்கையிடவும் உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*